# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1995/13 - 2016 නොවැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2016.11. 29

1995/13 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: டிக்/எல்ஏஎன்/02/30/33.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**சுவீகரிப்புக்கான உத்தேச காணி பற்றிய விபரங்கள் :**

மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், ரத்மலே கிராம அலுவலர் பிரிவில், பம்பரந்த மத்தி, பம்பரந்த தெற்கு கிராமங்களில் அமைந்துள்ள மாத்தறை சிரேஷ்ட நிலஅளவையாளரின் வரைபட இலக்கம் மு.பி. மாறை 2646 இல் குறிப்பிடப்பட்ட கீழ் வரும் காணித் துண்டுகள்.

1. **துண்டு இல. 01**
காணியின் பெயர்: ஸுரவீரகெமாகீரிய; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: ரத்மலே, ''விஜய'' வில் வதியும் நந்தன விஜயஸிரி விதானகமகே; விஸ்தீரணம்: 0.0022 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 02**
காணியின் பெயர்: ஸுரவீரகெமாகீரிய; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: மாத்தறை, ஹக்மன வீதி, கபடா வீதிய, இலக்கம் 36/13 இல் வதியும் அனில் ப்ரீத்திலால் சமரசிங்க; விஸ்தீரணம்: 0.00156 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 03**
காணியின் பெயர்: ஸுரவீரகெமாகீரிய; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: ரத்மலே, தலஹிட்டியாகொடவில் வதியும் கொரனேலிஸ், பதீகம, பிபுலகெதரயில் வதியும் வீரசேன கஸ்துரிஆரச்சி, ரத்மலே, தலஹிட்டியாகொடவில் வதியும் சந்ரஸிரி மலவிஆரச்சி உடன் ரத்மலேயில் வதியும் எஸ். குலதுங்க உடன் இன்னும் சிலர்; விஸ்தீரணம்: 0.0562 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு திகவெல்ல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத் தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும், 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். ரஞ்ஜித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2016, நவெம்பர் 21.

12 - 580

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: வ/18/84/2011/11.
காணி அமைச்சின் இல: 4-3/4/2012/D/300.

காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் இல. 1998/21 மற்றும் 2016.10.12 ஆம் திகதியிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூன்றாம் பிரிவின் முதல் பக்கத்தில் வத்தளை பிரதேச செயலாளர் மூலம் பிரசுரிக்கப்பட்ட கம் 3992 அம் இலக்க ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கங்கள் 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்ட காணி தொடர்பாக வத்தளை பிரதேச செயலாளர் முன்பாக வெளிப்படுத்தும்படியும் விபரங்கள் அறிக்கைகள் கையளிக்கப்பட வேண்டிய திகதியாக குறிப்பிடப்பட்ட 2016 ஒற்றோபர் 31 இற்கு பதிலாக 2017 சனவரி 30 என மாற்றப்பட வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கிறேன்.

டபிள்யு. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை ,
2016, நொவெம்பர் 22.

12 - 581